மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்பட்டு, அதனடிப்படையில் அக்கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

54—

கால்நடை மருத்துவமனை

***12759—திரு. வெ. கணேசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திட்டக்குடி தொகுதி, கழுதூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழுதூர் கிராமத்தில் அரசின் கொள்கைப்படி நேரடியாக கால்நடை மருத்துவமனை அமைக்க இயலாது. ஒரு கிராமத்தில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000–க்குமேல் இருந்தால்தான் கால்நடைக் கிளை நிலையம் ஆரம்பிக்க முடியும். பின்பு, கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 5,000–க்குமேல் இருந்தால், அந்தக் கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தப்படும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கழுதூர் கிராமத்தில் கால்நடைக்

2019 ஜூலை 8]

கிளை நிலையம் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.*

திரு. வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் கழுதூர் ஊராட்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இது சற்றேறக்குறைய ஐந்தாயிரம் வாக்காளர்களைக் கொண்ட பெரிய ஊராட்சி; சற்றேறக்குறைய ஒன்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்டுள்ளது. இந்த கழுதூர் ஊராட்சியைச் சுற்றி அரியநாச்சி, தொண்டங்குறிச்சி, புல்லூர், செவ்வேரி, நெடுங்குளம், சிறுகரம்பலூர், பாசார், விநாயநன்தல், கட்சிமயலூர், காஞ்சமங்களம் மற்றும் பயணப்பாடி போன்ற பல்வேறு ஊராட்சிகள் உள்ளன. இங்குள்ள கால்நடைகளுக்கு எல்லாம் மருத்துவம் பார்க்க வேண்டுமென்று சொன்னால், தாலுகா மருத்துவமனையாக இருக்கக்கூடிய திட்டக்குடி, பெண்ணாடம் அல்லது தொழுதூர் போன்ற நகரங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. மேலும், இப்போது கிராமங்களில் பெண்கள் எல்லோரும் நிறைய கறவை மாடுகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாடுகளுக்கு சினை ஊசி போட வேண்டுமென்று சொன்னால்,* artificial insemination*–க்கான ஊசியைப் போட வேண்டுமென்று சொன்னால், பெண்கள் 10, 20 கி.மீ. செல்வது சிரமமாக உள்ளது. கால்நடை மருத்துவமனைகள் அதிகமாக உருவாக்கப்பட்டால்தான் கால்நடை இனவிருத்தியைச் செய்ய இயலும். ஆகவே, தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கழுதூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கழுதூர் மற்றும் சுற்றுப்புற கிராமங்களான திருக்கழும்பலூர்,*

பாசார் மற்றும் அரியநாச்சி ஆகிய கிராமங்களைச் சேர்த்து, கால்நடை அலகுகள் மூன்றாயிரத்திற்குக் குறைவாக, அதாவது 2,669 கால்நடை அலகுகள் என்ற அளவில் மட்டுமே உள்ளதால், கால்நடைக் கிளை நிலையம் துவங்குவதற்கு சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு 125 புதிய கால்நடைக் கிளை நிலையங்களைத் துவங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை வழிநடத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். ஆகவே, அந்த வகையிலே, திட்டக்குடி தொகுதியில் அரசாணை எண் 9, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 23–1–2018–ன்படி, வடகரை கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம், 2 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல அரிய கருத்துகளை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே, துறை அதிகாரிகளை கழுதூர் பகுதிக்கு அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்குப் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

திரு. வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் கோவிலூர் மற்றும் கொத்தட்டை கிராமங்களில் கால்நடைக் கிளை மருத்துவமனைகள் உள்ளன. இந்தக் கிளை மருத்துவமனைகள் பஞ்சாயத்துக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இரண்டு கிளை மருத்துவமனைகளுக்கும் உடனடியாக அரசுக் கட்டடங்களைக் கட்டித்தருவாரா என இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பெண்ணாடம் நகரத்தில் உள்ள கால்நடை மருத்துவமனை, சுற்றுச் சுவர் இல்லாமல் திறந்தவெளியாக இருக்கிறது. ஆகவே, அதற்கும் சுற்றுச் சுவர் கட்டித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

2019 ஜூலை 8]

மேலும், கால்நடை மருத்துவமனைகளில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் கால்நடைகள் மிகவும் சிரமப்படுகின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கவனத்தில் கொண்டு ஒவ்வொரு கால்நடை மருத்துவமனையிலும், போர்வெல் போட்டு, தொட்டி கட்டி கால்நடைகள் தண்ணீர் குடிப்பதற்கு ஏதுவாக வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, என்னுடைய தொகுதியானது 101 ஊராட்சிகள் கொண்ட தொகுதி. அந்த 101 ஊராட்சிகளில் 60–க்கும் மேற்பட்ட ஊராட்சிகளிலுள்ள தண்ணீர் உப்பு நீராக இருக்கக்கூடிய காரணத்தால் நாள்தோறும் பொதுமக்களின் இறப்பு விகிதம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. பொதுமக்கள் குடிக்கின்ற தண்ணீரும் உப்பு நீராக இருக்கிறது. கால்நடைகள் குடிக்கின்ற நீரும் உப்பு நீராக இருக்கிறது. அந்தக் கால்நடைகளைச் சாப்பிட்டாலும் சிரமம்தான். ஏனென்றால், kidney failure ஆகி dialysis செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொகுதியில் உள்ள இளைஞர்களுக்கு பெண் கொடுப்பதற்கே பயப்படுகிறார்கள். எல்லோரும் kidney failure ஆகி இருந்தால், எப்படி திருமணம் செய்து கொடுப்பது என்று பெண் கொடுக்கக்கூடியவர்கள் அச்சப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. நான் வேடிக்கைக்காக இதைச் சொல்லவில்லை. தினந்தோறும் வட்டாட்சியர்கள், மாவட்ட ஆட்சியர்களுக்கு இதுகுறித்து தகவல் அனுப்பி, திட்டக்குடி தொகுதியில் எத்தனை கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது; அந்தக் குடிநீரில் உப்புநீர் கலந்ததன் காரணமாக பொதுமக்கள் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்துப் பார்த்தால், ஒரு மாதத்தில் குறைந்தபட்சம் 50, 60 பேர் இறந்து கொண்டிருக்கிறார்கள். என் தொகுதியில் தண்ணீர் உப்புநீராக இருப்பதால், அதைக் குடித்துவிட்டு, ஏழாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஊனமுற்றோர்களாக இருக்கிறார்கள். ஆகவே, பொதுமக்களின் நலன் கருதி, உடனடியாக நல்ல குடிநீர் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கொள்ளிடத்திலிருந்து கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றினால் திட்டக்குடி தொகுதி மட்டுமல்ல, பெரம்பலூர் தொகுதி, உளுந்தூர்பேட்டை தொகுதி மக்களின் குடிநீர்ப் பஞ் சமும் தீர்க்கப்படும். அதேபோல், சிறுநீரகப் பாதிப்புகளும் ஏற்படாமல் இருக்கும். ஆகவே, இதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[2019 ஜூலை 8

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை முடியுங்கள்.*

திரு. வெ. கணேசன்: *இது முக்கியமான விஷயம். ஒரே ஒரு நிமிடம் மட்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்கு மூல வினா அனுமதிக்கப்பட்டு, அதன்மீது ஏற்கெனவே ஒரு துணை வினா கேட்டுவிட்டீர்கள். இன்னொரு வினாவை எப்போதுதான் முடிப்பீர்கள்? இப்படியிருந்தால் கேள்வி நேரத்தை நான் எப்படி முடிக்க முடியும்?*

திரு. வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடுகளுக்கு மேய்ச்சல் இடம் இல்லை என்பதால் மேய்ச்சலுக்குச் செல்ல முடிவதில்லை. எனவே, மேய்ச்சல் பண்ணை உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், தரிசு நிலங்களையெல்லாம் பட்டா போட்டு எடுத்துக் கொண்டுவிட்டதால், மாடுகள் மேய்வதற்கு இடமில்லை. எனவே, மேய்ச்சல் பண்ணைகளை உருவாக்க வேண்டும். அதேபோல், எல்லா கால்நடைகளும் தண்ணீர் குடிப்பதற்கு ஏதுவாக, ஒவ்வொரு கிராமத்திலும் தொட்டி கட்டி குடிநீர் வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறையிலே ஆரம்பித்து, உள்ளாட்சித் துறைக்குச் சென்று, மீண்டும் கால்நடை பராமரிப்புத் துறைக்கு வருகைதந்து பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள்.*

திட்டக்குடி தொகுதியில் சுமார் 38,700 மாட்டினங்களும், 34 ஆயிரம் ஆட்டினங்களும், ஒரு இலட்சம் கோழியினங்களும் உள்ளன. இவற்றிற்கு அனைத்து மருத்துவச் சேவைகளையும் வழங்கிட 11 கால்நடை மருந்தகங்களும், ஒரு கால்நடை மருத்துவமனையும், 4 கால்நடைக் கிளை நிலையங்களும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது,

2019 ஜூலை 8]

கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நபார்டு திட்டத்தின் மூலமாக இந்த ஆண்டு கால்நடை மருத்துவமனைகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். அந்த வகையில், திட்டக்குடி தொகுதியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கும் கட்டடம் கட்டுவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, கால்நடைகளுக்குத் தேவையான தண்ணீர்த் தொட்டிகளை ஆங்காங்கே அமைக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழகம் முழுவதும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக கால்நடைகளுக்காக இதுகாறும் 15,550 தொட்டிகள் ஆங்காங்கே கட்டப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, திட்டக்குடி தொகுதியிலே கால்நடைகளுக்கு தண்ணீர்த் தொட்டி அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நல்ல தண்ணீர் வசதியுடன் கண்டிப்பாக தொட்டிகள் கட்டித் தரப்படும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

மகப்பேறு மருத்துவமனை

***14735—திரு. கே.எஸ். விஜயகுமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், ஆரம்பாக்கம் ஊராட்சியில் மகப்பேறு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*